NATIONAL SENIOR CERTIFICATE EXAMINATION
NOVEMBER 2014

# TAMIL HOME LANGUAGE: PAPER II

Time: 2½ hours | 80 marks

## PLEASE READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY

1. This question paper consists of 14 pages. Please make sure that your question paper is complete.

2. Read the instructions to each question carefully.

3. Instructions for **Section ONE** is given on page 2.

4. Answer ONE question from Section 2 and ONE question from Section 3. ONE of your answers must be a contextual answer.

5. All answers must be in **TAMIL**.

6. It is in your own interest to write legibly and present your work neatly.

IEB Copyright © 2014

# பகுதி ஒன்று: கவிதைகள்

நான்கு கவிதைகள் கொடுக்கப் பட்டுள்ள ஏதேனும் இரண்டைப்பற்றி விடை தருக–அதாவது (10+10=20) + 10–கற்பிக்காத கவிதை [30]

1. கீழ்வரும் கவிதையைப் படித்து பின்வரும் கேள்விகளுக்க சரியான் விடை எழதுக:

1 வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே!

2 வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே!

3 ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழிய வே!

4 எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழிய வே!

5 சூழ்க நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துளங்குக வையகமே!

6 தொல்லை வினைதரு தொல்லை அகன்று
சுடர்க தமிழ்நா டே!

7 வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழி யே!

8 வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழிய வே!

1.1 கோடிட்ட இடங்களில் தகுந்த சொல்லால் நிரப்புக.

1.1.1 ஏழ்கடல் ____________ தன்மணம் வீசி (1)

1.1.2 ____________ நீங்கத் தமிழ் மொழி (1)

1.2 கீழ்வரும் கேள்விகளுக்கு விடை தருக:

1.2.1 இக்கவிதையை எழதியவர் யார்? (1)

1.2.2 எந்த மொழியை வாழ்த்துகிறது? (1)

1.2.3 எந்த நான்கு நாடுகளில் தமிழ் வாழ்கின்றது? (2)

IEB Copyright © 2014

1.3 எது உண்மை, எது உண்மை அல்ல என்று எழுதுக:

1.3.1 இக்கவிதையில் ஆறுகடல் வைப்பினும் என்று எழுதியுல்லது (1)

1.3.2 இக்கவிதைபை எழுதிய கவிஞர் தமிழ் மொழி வளர்மொழியாக இருக்க வேண்டும் என்று எழுதிகிறார்? (1)

1.4 எதிர்ச்சொல் தருக:

1.4.1 இற (1)

1.4.2 நல்லது (1)

**[10]**

அல்லது:

1.5 இக்கவிதையை மனதில் வைத்துக்கொண்டு தமிழ் மொழியைப் பற்றி 10-12 வரிகள் எழதுக

**[10]**

2. கீழ்வரும் கவிதையை நன்றாகப் படித்து சரியான விடை தருக.

## வேற்றுமை இல்லை

(பாட்டு - தேசியகவி பாரதியார்)

வெள்ளை நிறத்தொரு பூனை - எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்!

பிள்ளைகள் பெற்றதப் பூனை -அவை
பேருக் கொருநிற மாகும்!

சாம்பல் நிறமொரு குட்டி-கருஞ்
சாந்து நிறமொரு குட்டி!

பாம்பு நிறமொரு குட்டி - வெள்ளைப்
பால் நிறமொரு குட்டி!

எந்த நிறமிருந் தாலும் - அவை
யாவும் ஒரேதர மன்றோ?

இந்த நிறம்சிறி தென்றும் - இஃது
ஏற்றமென் றும்சொல்ல லாமோ?

வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால் - அதில்
மானுடர் வேற்றுமை இல்லை

எண்ணங்கள் செய்கைகள் எல்லாம் - இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்!

2.1 கோடிட்ட இடங்களில் தகுந்த சொல்லால் நிரப்புக:

2.1.1 எங்கள் வீட்டில் __________ கண்டீர் (1)

2.1.2 கருஞ் __________ நிறமொரு குட்டி (1)

2.2 சரியாள விடை தருக:

2.2.1 இக்கவிதையை எழுதியவர் யார்? (1)

2.2.2 வேள்ளை நிற பூனை எங்க வளர்கிறது (1)

2.2.3 தாய்ப்பூளை என்ன நிறம்? (1)

IEB Copyright © 2014

2.3 உண்மை, அல்லது உண்மை அல்ல என்று எழுதுக:

2.3.1 வேள்ளை நிற பூனை வீட்டில் இருந்தது (1)

2.3.2 பச்சை நிற பூனைக்குட்டி இருந்தது (1)

2.3.3 பூனை பால் குடிக்காது (1)

2.4 எதிர்ச்சொல் தருக:

2.4.1 வெள்ளை (1)

2.4.2 இவை (1)

**[10]**

அல்லது:

2.5 பூனைகளைப்பற்றி 10-12 வரிகள் எழுதுக: **[10]**

IEB Copyright © 2014 

3. கீழ்வரும் கவிதையைப்படித்து, பின்வரும் கேள்விகளுக்கு சரியான விடை எழுதுக:

1 ஜாதி மதங்களைப் பாரோம் - உயர்
ஜன்மம்இத் தேசத்தில் எய்தின ராயின்
வேதிய ராயினும் ஒன்றே - அன்றி
வேறு குலத்தின ராயினும் ஒன்றே (வந்தே)

2 ஈனப் பறையர்க ளேனும் - அவர்
எம்முடன் வாழ்ந்திங் கிருப்பவர் அன்றோ?
சீனத்த ராய்விடு வாரோ? - பிற
தேசத்தர் போற்பல தீங்கிழைப் பாரோ? (வந்தே)

3 ஆயிரம் உண்டிங்கு ஜாதி - எனில்
அன்னியர் வந்து புகல்என்ன நீதி? ஓர்
தாயின் வயிற்றில் பிறந்தோர் - தம்முள்
சண்டைசெய் தாலும் சகோதரர் அன்றோ? (வந்தே)

4 ஒன்று பட்டால் உண்டு வாழ்வே - நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும் - இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கேது வேண்டும்? (வந்தே)

5 எப்பதம் வாய்த்திடு மேனும் நம்மில்
யாவர்க்கும் அந்த நிலைபொது வாகும்
முப்பது கோடியும் வாழ்வோம் - வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம் (வந்தே)

6 புல்லடி மைத்தொழில்பேணிப் - பண்டு
போயின நாட்களுக் கினிமனம் நாணித்
தொல்லை இகழ்ச்சிகள் தீர - இந்தத்
தொண்டு நிலைமையைத் தூவென்று தள்ளி (வந்தே)

3.1 கோடிட்ட இடங்களில் தகுந்த சொல்லால் நிரப்புக:

3.1.1 வேதிய ராயினும் ________________ (1)

3.1.2 எனில் அன்னியர் வந்து ______________ நீதி (1)

IEB Copyright © 2014

3.2 சரியான விடை எழுதுக:

3.2.1 இக்கவிதையை எழுதியவர் யார்? (1)

3.2.2 கவிஞர் எத்தனை தாய்களைப் பற்றி எழுதியுல்லார்? (1)

3.2.3 எந்த வரி "கூடி வாழ்ந்தால் கோடி நன்மையைப்பற்றி" கூறுகிறது (1)

3.3 எது உண்மை, எது உண்மை அல்ல என்று எழுதுக:

3.3.1 வந்தே மாதரம் ஒரு சுதர்திர பாடல் (1)

3.3.2 கவிஞர் ஐம்பது கோடியையப்பற்றி எழுதினார் (1)

3.4 எதிர்ச்சொல் தருக:

3.4.1 இனறி (1)

3.4.2 உண்டு (1)

3.4.3 முன் (1)
**[10]**

அல்லது:

3.5 மேற்கண்ட கவிதையைப்பற்றி 10-12 வரிகள் எழுதுக: **[10]**

IEB Copyright © 2014 

4. கீழ்லரும் கவிதையைப் படித்து பின்வரும் கேள்விகளுக்கு சரியான விடை தருகு

## காதலோ காதல்!

கண்டதொரு காட்சி கனவுநன வென்றறியேன்,
எண்ணுதலுஞ் செய்யேன், இருபது பேய் கொண்ட
கண்ணும் முகமும் களியேறிக் காமனார் [வன்போல்
அம்பு நுனிகள் அகத்தே அமிழ்ந்திருக்க,
கொம்புக் குயிலுருவங் கோடிபல கோடியாய்
ஒன்றே யதுவாய் உலகமெலாந் தோற்றமுற
சென்றே மனைபோந்து சித்தந் தனதின்றி,
நாளொன்று போவதற்கு நான்பட்ட பாடனைத்தும்
தாளம் படுமோ? தறி படுமோ? யார் படுவார்?
நாளொன்று போயினது; நானு மெனதுயிரும்,
நீளச்சிலை கொண்டு நின்றதொரு மன்மதனும்,
மாயக் குயிலுமதன் மாமாயத் தீம்பாட்டும்;
சாயைபோ லிந்திரமா சாலம்போல் வையமுமா
மிஞ்சி நின்றோம்.

4.1 கோடிட்ட இடங்களில் சரியான சொல்லால் நிரப்புக.

4.1.1 இருபது பேய் ____________ வள்போல் (1)

4.1.2 ____________ நுனிகள அகத்தே அமிழ்ந்திரக்க (1)

4.2 சரியான விடை தருக:

4.2.1 இக்கவிதையை எழுதியவர் யார்? (1)

4.2.2 மறு பிறப்பில குரங்கன் எல்லாறு பிறந்தார? (1)

4.2.3 மாடன் யார் (1)

4.3 எது உண்மை, எது உண்மை அல்ல என்று எழுதுக:

4.3.1 மறுபிறப்பில் மாடன் மாடாக பிறந்தார் (1)

4.3.2 மறுபிறப்பில் இளவரசன் கிளியாக பிறந்தார் (1)

4.4 எதிர்ச்சொல் தருக:

4.4.1 போ (1)

4.4.2 உண்மை (1)

4.4.3 தவர் (1)

**[10]**

அல்லது:

4.5 சின்ன குயிலியை பற்றி 10-12 வரிகள் எழுதுக.

**[10]**

5. காணப்படாத கவிதை (UNSEEN POEM)

இக்கவிதையை நன்றாகப்படித்து சரியான விடை நருக:

### *அன்புள்ள மனிதனே!!*

*என் உள்ளங்கையில்*
*உன்னைத் தாங்குகிறேன்*
*ஆற்றங்கரையில் மாநாடு போடும்*
*குருவிகளைப் போல்*
*சிரித்து மகிழ்கிறாய்*
*என்னையும் சேர்த்துக் கொள்வாயா?*

*சுட்டுவிரல் காட்டினேன்*
*சூரியன் அஸ்தமித்தது*
*நீ குதூகலமாக இருக்க*
*நான் நெய்த குளிர்காற்று*
*உன் காதோரம் உலா வந்தது?*

*வசந்த காலத்திற்காகக் காத்திருக்கும்*
*பூக்களைப்போல காத்திருந்தேன்*
*உன் ஜன்னல்களை*
*மூடிக் கொண்டாய்?*
*ஜன்னலோரம் படுத்திருந்தாய்?*
*நில்வொளியால்*
*உன்னைப் போர்த்தினேன்.*
*உன் கனவுகளில்*
*வழிந்த கண்ணீரில்*
*நிலவொளி மின்னியது.*
*ஆறுதல் கொடுக்க எண்ணினேன்*
*நீ செவிகளைச் சாத்திக் கொண்டாய்.*

**எஸ். அற்புதராஜ்**
உதவித் தலைமையாசிரியர்
புனித வளனார் மேல் நிலைப்பள்ளி,

5.1 கோடிட்ட இடங்களில் சரியான சொற்கள் எழுதுக.

5.1.1 என் உள்ளங்கையில் உன்னைத் _______________ (1)

5.1.2 நீ _____________ இருக்கு நான் நெய்த குளிர்காற்று (1)

5.1.3 நில்வொளியால் உன்னைப் _______________ (1)

5.2 சரியான விடை எழுதுக:

5.2.1 எதைப் போல் சிரித்து மகிழ்கிறாய்? (1)

5.2.2 சுட்டுவிரல் காட்டின பிறகு என்ன நடந்தது? (1)

5.2.3 இக்கவிதையை பாடியவர் எதைப் போல் காத்திருந்தான் (1)

5.2.4 எது நிலவொளி மின்னியது? (1)

5.3 எதிர்ச்சொல் தருக:

5.3.1 உள்ள (1)

5.4 ஒருமைக்குப் பன்மை எழுதுக.

5.4.1 கை (1)

5.4.2 பூ (1)

**[10]**

**30 marks**

# பகுதி இரண்டு: சிறிய கதைகள்

1. கீழ்வரும் பகுதியை நன்றாகப்படித்து, பின்வரும் கேள்விகளுக்கு விடை எழுதுக.

புலவர்கள் இவன் பெருஞ்செல்வனாக இருக்கிறானே! ஏதேனும் உதவி செய்வான் என்று சென்றால், 'சோம்பேறிகளாகத் திரியும் உங்களுக்கு ஏன் பொருள் கொடுக்க வேண்டும்' என்று வாய்க்கு வந்தபடி இகழ்ந்துரைப்பான். தானும் தக்கவாறு பொருளைச் செலவிட்டு உண்ண மாட்டான். உண்ண விரும்பும் மனைவி மக்களையும் உண்ண விடமாட்டான். பொருள்கள எல்லாம் பெட்டிகளில் பூட்டி வைத்தான். அப்பெட்டிகள் மீது தானே இராப்பகல் காவலாக இருந்து கொண்டிருந்தான்.

1.1 கோடிட்ட இடங்களில் சரியான சொற்களால் நிரப்புக

1.1.1 புலவர்கள் இவன் பெருஞ் ____________________ (1)

1.1.2 தானும் ____________________ பொருளைச் செலவட்டு உண்ண மாட்டான். (1)

1.2 சரியான விடை எழுதுக:

1.2.1 புலவர்கள் மாணிக்கசாமியைப் பற்றி என்ன நினைத்தார்கள் (2)

1.2.2 புலவர்கள் உதவிக்கு போன பின் மாணிக்கசாமி என்ன சொன்னான்? (2)

1.2.3 பொருள்களை எங்கே வைத்தான் (2)

1.3 ஒருமைக்கு பன்மை எழுதுக:

1.3.1 பொருள் (1)

1.3.2 படம் (1)

1.4 எதிர்ச்சொல் தருக:

1.4.1 ஒருவன் (1)

1.5 முடிவு செய்க:

1.5.1 அன்னையும் பிதாவும்... (1)

1.5.2 உண்டி சுருங்குதல்... (1)

1.5.3 ஈயார் தேட்டை... (1)

1.5.4 ஏவா மக்கள்... (1)

1.6 "கள்ளர்கள் கொள்ளை" என்ற கதையைப் பற்றி 10 – 12 வரிகள் எழுதுக. (10)

**[25]**

அல்லது:

1.7 "ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்" என்று கொன்றை வேந்தன் தொடரின் படி, கள்ளர் கொள்ளை என்ற கதையைப்பற்றி 20 – 25 வரிகள் எழுதுக.

**[25]**

IEB Copyright © 2014

## பகுதி மூன்று: நாடகம்

1. கீழ்வரும் வசனத்தை அடிப்படையாகக் கொண்டு, பின்வரும் கேள்விகளுக்குப் பதல் தரகு.

**ஜெகன்:** ஆமாம்மா...பத்து ரூபா கொடும்மா.

**லட்சுமி :** எதுக்குடா பணம்

**ஜெகன்:** இன்னைக்கு பரீட்சையில பேப்பருக்கு எல்லா பையன்களும் பத்து பத்து ரூபா கொடுக்கணுமுனு எங்க டீச்சர் சார் சொன்னாங்க.

**லட்சுமி :** ஆமா ரெண்டுநாளைக்கு முன்னாலே ஏதோ புஸ்தகம் வாங்கணும்னு பத்து ரூபா வாங்கிட்டு போனியே புஸ்தகம் வாங்குனியா எங்கே பார்ப்போம்

1.1 முடிவு செய்க:

1.1.1 எதுக்குடா ____________________ (1)

1.1.2 எங்க டீச்சர் சார் ____________________ (1)

1.2 சரியான விடை எழுதுக:

1.2.1 இந்தநாடகத்தில் லட்சுமி யார்? (2)

1.2.2 ஜெகன் யார்? (2)

1.2.3 இந்த நடகத்தில் கருத்து என்ன? (2)

1.2.4 ஜெகனின் மனைவி பெயர் என்ன? (2)

1.3 உண்மை, அல்லது உண்மை அல்ல என்று எழுதுக

1.3.1 ஜெகன் திருடனா மாறினான்? (2)

1.3.2 இந்த நாடகத்தில் லட்சுமி மிகவும் துடிக்கிறாள் (2)

1.4 ஆண்பாலுக்கு பெண்பரல் தருக

1.4.1 ஆசிரியர் (1)

1.4.2 கணவன் (1)

1.4.3 திருடன் (1)

1.5 எதிர்ச்சொல் தருக

1.5.1 முன் (1)

1.5.2 இன்று (1)

1.5.3 இன்பம் (1)

1.6 ஜெகனை பற்றி 5 வரிகள் எழுதுக.

(5)
**[25]**

அல்லது

1.7 தங்கப்பக்கம் என்ற நாடகத்தைப் பற்றி 20-25 லரிகள் எழுதுக.

**[25]**

**50 marks**

**Total: 80 marks**

IEB Copyright © 2014